முச்சந்தி முரளி



"சபாஷ், அப்ப
காக்கிச்சட்டையும்
கறுப்புச்சட்டையும்
இனி ஒரேமோதல்
தான் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 156

செவ்வாய்க்கிழமை
30 ஏப்ரல் 2024

சித்திரை 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



சட்ட அமுலாக்கல் பிரிவினரின்

# வதைகளும் கொலைகளும் அச்சத்தை ஏற்படுத்துகின்றன!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கருத்துக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும்கண்டனம்

**கொழும்பு, ஏப்ரல் 30**

**படுகொலைகளும், சட்டஅமுலாக்கல் பிரிவினரின் சித்திரவதைகளும், பொலிஸ் தடுப்பின்போது ஏற்படும் மரணங்களும் அச்சம்தரும் வகையில் அதிகரித்துள்ள பின்னணியில், 'சரியான விடயத்துக்காக ஆயுதங்களைப் பயன்படுத்தத் தயங்கவேண்டாம்' என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து பிற்போக்குத்தனமானது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

11

## சட்டத்தரணிகளின் முகங்களை தோலுரிப்பாராம் டிரான் அலஸ்!

கொழும்பு, ஏப். 30
போதைப்பொருள் மாபியாக்களுக்கு எதிராக நீதிமன்றில் முன்னிலையாகி வாதாடும் சட்டத்தரணிகள் தொடர்பில் வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குற்றவாளிகள், பாதாள உலக செயற்பாடுகளில் ஈடுபடும் கொலைகாரர்களைக்

11

## சுகாதாரச் சீர்கேட்டால் உணவகங்களுக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், ஏப். 30
யாழ்ப்பாணம் - திருநெல்வேலிப் பகுதியில், சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய மூன்று உணவகங்கள் 'சீல்' வைக்கப்பட்டுள்ளன.

11

## ஈழவேந்தன் காலமானார்



ஒட்டாவா, ஏப். 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இலங்கை மத்திய வங்கியின் ஓய்வு பெற்ற உத்தி

11

## ஊடகவியலாளர் ரஜிவர்மனுக்கு உதயனில் நேற்று அஞ்சலிப்பு!



யாழ்ப்பாணம், ஏப். 30
'உதயன்' பத்திரிகையின் ஊடகவியலாளராகப் பணியாற்றிய காலத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளர் செ.ரஜிவர்மனின் 17ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் 'உதயன்'

11

வெடிபொருளைப் பயன்படுத்தி

## சட்டவிரோத மீன்பிடி; 5 மீனவர்கள் கைது!

மன்னார், ஏப். 30
வெடிபொருள்களைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட ஐந்து மீனவர்கள் மன்னார், சிலாபம் கடற்பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

11

## மின்னலால் தாக்குண்டு முன்னாள் போராளி பலி!

ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஏப். 30
கிளிநொச்சி மாவட்டம் ஐயங்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், மின்னல் தாக்கி முன்னாள் போராளியொருவர் உயிரிழந்தார். காளிமுத்து சண்முகராஜா (வயது- 49) என்பவரே உயிரிழந்தவராவார்.
மழை பெய்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மரத்தின் கீழே நின்றிருந்தவர்கள் மீது மின்னல் தாக்கியதாக முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிய

11

## காரைநகரில் ஆயுதம்: இன்று அகழ்வுப்பணி!

யாழ்ப்பாணம், ஏப். 30
காரைநகரில் ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்து, தனியார் காணியொன்றில் இன்று காலைமுதல் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

11

யாழ்ப்பாண மாவட்டத்தில்

## 7,000 காணித்துண்டுகள் இதுவரை பகிர்ந்தளிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 30
யாழ். மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் 7 ஆயிரம் அரச காணித்துண்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக மாகாண காணி ஆணையாளர் அம்பலவாணர் சோதிநாதன் தெரிவித்தார்.

11

## முதலீட்டு நடவடிக்கைக்காக அரச காணிகள் பகிரப்படும்!

யாழ்ப்பாணம், ஏப். 30
முதலீட்டு நடவடிக்கைகளுக்காக அரச காணிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என வடமாகாண காணி ஆணையாளர் அம்பலவாணர் சோதிநாதன் தெரிவித்துள்ளார்.
மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
முதலீட்டுக்காக ஒதுக்கப்படும் காணிகள் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிரதேச செயலர்கள் சமர்ப்பிப்பதில்லையே? என்று கேட்கப்பட்ட கேள்விக்கே

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவில்

# பேருந்துச் சேவையின்றி அந்தரிக்கும் பயணிகள்

யாழ்ப்பாணம், ஏப்.30


**நயினாதீவில் ஈடுபட்டுவந்த பேருந்துச் சேவை தடைப்பட்டுள்ளதால் போக்குவரத்து வசதியின்றி நெருக்கடிகளை சந்திக்க நேரிடுகின்றது என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

நயினாதீவில் இதுவரை காலமும் ஒரேயொரு பேருந்துச் சேவை இடம்பெற்று வந்தது. இந்தப் பேருந்துச் சேவை தற்போது இடம்பெறுவதில்லை.

இதனால் நயினாதீவு மக்கள் உட்பட நயினாதீவுக்கு வேலை நிமித்தம் வருகை தரும் பணியாளர்களும் பலமைல் தூரத்தை நடந்தே செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து இ.போ.ச. சாலையைத் தொடர்புகொண்டு கேட்டபோது, "சேவையில் ஈடுபட்ட பேருந்து தற்போது பழுது காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. புதிய பேருந்து எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பொறுப்பற்று பதிலளிக்கின்றனர்.

எனவே நயினாதீவில் பேருந்து சேவையை வழமைக்குக் கொண்டு வர அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)



வவு. பேருந்து நிலையத்தில்

## சுகாதாரச் சீர்கேட்டுடன் மலசலகூடங்கள்

பயணிகள் விசனம்

வவுனியா, ஏப்.30

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பாவனைக்கான இரு மலசலகூடத் தொகுதிகளும் சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்படுகின்றன என்று பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒரு தொகுதி மலசலகூடத்தை தேசிய போக்குவரத்து அதிகார சபையினர் மூடியுள்ளமையால், ஒரு மலசலகூடத்தையே பயணிகள் பயன்படுத்த வேண்டியுள்ளது. பேருந்து நிலையத்தின் நிர்வாகக் கட்டமைப்பு தேசிய போக்குவரத்து அதிகாரசபையின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது. மலசலகூடங்களை குத்தகைக்கு வழங்காமல் அதற்காக கட்டணத்தை தேசிய போக்குவரத்து அதிகாரசபையினர் அறவிடுகின்றபோதும் மலசலகூடம் சுகாதாரச் சீர்கேட்டுடனேயே காணப்படுகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-18)

## மரமுந்திரிகை தோட்டத்தின் நுழைவாயில் கதவு திருட்டு!

யாழ்ப்பாணம், ஏப். 30

நாகர்கோவில் மரமுந்திரிகை செயற்றிட்டத்தின் பொது நுழைவாயில் கதவுகளை விஷமிகள் கடந்த சனிக்கிழமை களவாடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாகர்கோவில் மேற்கு ஜே/424 கிராம அலுவலர் பிரிவில் ஐந்தாண்டுக்கு முன்னர் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மரமுந்திரிகைத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. முப்பது ஏக்கர் நிலப்பரப்பை சீர்செய்து தூண், முட்கம்பிகள் கொண்டு வேலி அமைக்கப்பட்டு 30 பேருக்கும் பிரிக்கப்பட்டு 30 கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

அதனை பராமரிப்பதற்காக நோர்வே நாட்டின் நிதிப் பங்களிப்பிலும் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் அனுசரணை ஊடாகவும் இந்தத் திட்டம் மாவட்ட செயலகம் மூலமாக பிரதேச செயலகத்தின் இணைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

இத் திட்டம் முன்னோக்கிய ஒரு செயற்றிட்டமாக காணப்பட்டதோடு இரண்டு வருடங்களில் மர முந்திரிகையிலிருந்து பயனையும் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

இந்தத் திட்டத்துக்கான வீதியமைப்பதற்கான ஒழுங்கைகள் இடப்பட்டு முப்பது காணிகளையும் இணைப்பதற்காக பொதுவாக ஒரு நுழைவாயில் அமைக்கப்பட்டிருந்த நிலையிலே, அந்த நுழைவாயில் கதவை விஷமிகள் களவாடிச் சென்றுள்ளனர். (ஓ-27)

## வீட்டினுள் பதுக்கிய மரக்குற்றிகள் மீட்பு

இருவர் கைது

மானிப்பாயிலுள்ள வீடொன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த பாலை மற்றும் முதிரைக் குற்றிகள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் அதனை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய திணைக்களத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து கடந்த புதன்கிழமை மேற்கொண்ட சோதனையிலேயே மரக்குற்றிகள் சிக்கின.

இதன்போது 30 முதிரை மரக்குற்றிகள், 33 பாலை மரத் தீராந்திகள் என்பன கைப்பற்றப்பட்டன.

முல்லைத்தீவில் வெட்டப்பட்டு சட்டவிரோதமான முறையில் அவை எடுத்துவரப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-125)

## பயணப்பொதியில் கசிப்பு பேருந்தில் இருவர் கைது!

இ.போ.ச. பேருந்தில், சூட்சுமமாக பயணப்பொதியில் கசிப்புக் கடத்திய இருவர் முல்லைத்தீவு தருமபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய புதுக்குடியிருப்புப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

சந்தேகநபர்களிடமிருந்து 45 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. கசிப்பை விசுவமடுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு செல்ல அவர்கள் முற்பட்டுள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்தார். (ச-113)

## சட்டவிரோத மதுபானம்: ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.30

அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்ற குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் ஒருவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைவாக வேலணை நான்காம் வட்டாரத்தில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## பதின்ம வயதுக் கர்ப்பம் தாய், சேய்க்கு ஆபத்து

ஜென்சன் றொனால்ட் அறிவுரை

பூநகரி, ஏப். 30

பத்து முதல் பத்தொன்பது வயதில் கர்ப்பம் தரிப்பது தாயினதும் கருவுறும் குழந்தையினதும் ஆரோக்கியத்துக்கு ஆபத்தானது. அதைத் தவிர்ப்பதே புத்திசாலித்தனமானது என பூநகரி பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

அண்மையில் பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறுவர் கழக அங்கத்தவர்களுக்கான விழிப்புணர்வூட்டும் பயிற்சிப்பட்டறையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- பதின்ம வயதுப் பெண்களின் கருப்பை கருவை முழுமையான விளைத்திறனுடன் சுமக்கும் ஆற்றலைக் கொண்டிராது. இடுப்பு வளைய என்புகள் பூரணமாக தாங்கு திறனைக் கொண்டிராது. தாயின் உடற்திணிவுச்சுட்டி, குருதியிலுள்ள ஈமோகுளோபின் அளவு என்பன பொருத்தமான மட்டத்தை அடைந்திராது. அத்துடன் அந்தப்பெண் தன்னைத்தானே தாயாக உணரும் உளப்பக்குவமும் குறைவாகவே இருக்கும்.

பதின்ம வயதுப்பருவத்தில் உருவாகும் கர்ப்பங்கள் கருச்சிதைவுக்குட்படல், பூரண விருத்தியடையாத குழந்தை பிறத்தல் போன்ற பல சிக்கல்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உருவாகும். ஆகவே பதின்ம வயதுப்பிள்ளைகள் தமது கல்வியிலும், ஆளுமை வளர்ச்சியிலும் கவனஞ்செலுத்துவதோடு தமது உடல் ஆரோக்கியத்தையும் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் சமூகம் பற்றிய அறிவையும் வளர்த்துக்கொள்ளவேண்டும் - என்றார். (ப-9)

## மேலதிக வகுப்புகள் நடத்துவதற்குத் தடை

கொழும்பு, ஏப்.30

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சாதாரண தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் என்பன இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும்வரை தடை செய்யப்பட்டுள்ளதுஎன்றுபரீட்சைத்திணைக்களம்தெரிவித்துள்ளது.

பரீட்சைக் காலப்பகுதியில், பாடங்கள் தொடர்பான குறிப்புகள், பாட விரிவுரை, வகுப்புகள் நடத்துதல் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்துவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை தொடர்பான வினாக்கள் வழங்கப்படும் என சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல், கையேடுகள் வழங்குதல் மற்றும் அச்சிடப்பட்ட கையேடுகள் வழங்குதல் போன்ற செயற்பாடுகளும் தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்க வேலைகோரி பட்டதாரிகள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 30

அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலை வழங்கவேண்டுமென வலியுறுத்தி, வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஏமாற்றாதே ஏமாற்றாதே பட்டதாரிகளை ஏமாற்றாதே, வேண்டும் வேண்டும் வேலை வேண்டும், நாசம் நாசம் கனவுகள் நாசம் உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பியிருந்தனர்.

பலவருட கனவு வெறும் கனவாகவே போய்விடுமா, எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது, அழிக்காதே அழிக்காதே எமது எதிர்காலத்தை அழிக்காதே, வயது ஏறுது வாழ்க்கை போகுது வேலை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு மனுவையும் போராட்டகாரர்கள் அனுப்பி வைத்துள்ளனர். அதேபோன்று இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி அரசியல்வாதிகளுக்கும் மனுவின் பிரதிகளை அனுப்பிவைக்க உள்ளதாகவும் பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-125-66)

## நாட்டை விட்டோடும் திட்டம் இல்லை



மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30

நாட்டைவிட்டு வெளியேறும் எவ்வித திட்டமும் எனக்கு இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன நாட்டைவிட்டு வெளியேறி, தென்கொரியாவில் தஞ்சமடையவுள்ளார் எனவும், தென்கொரியாவில் உள்ள ஐ.நா.வின் முன்னாள் பொதுச்செயலர் பான் கீ மூனின் குடும்பம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது எனவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் நீங்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தயாராகி வருகின்றீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த மைத்திரிபால சிறிசேன,

'நான் எங்கு செல்வது? நான் எங்கும் செல்லமாட்டேன்.' - என்று குறிப்பிட்டார். அதேவேளை, சுதந்திரக்கட்சியின் மேதினக் கூட்டம் கம்பஹாவில் நடைபெறும் எனவும் அவர் தகவல் வெளியிட்டார். (ஒ-44)

## அரிசியில் ஊழல்?

அரசாங்கத்தால் இலவசமாக தரமற்ற அரிசி விநியோகிக்கப்படுகிறது என எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் மாவட்ட செயலாளர்களுக்கு இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் தரம் குறைந்த அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச)

## புகைபிடிப்பதற்கு ரூ.52 கோடி செலவு

இலங்கை மக்கள் நாளொன்றுக்கு 52 கோடி ரூபாவை புகைபிடிப்பதற்குச் செலவிடுகின்றனர் என்று மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் 83 வீதமான மரணங்கள் தொற்றா நோய்களால் ஏற்படுவதாகவும், புகைபிடித்தல் இதற்கான முக்கியமான காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

## காட்டுத் தீ

கொழும்பு, ஏப்.30

நுவரெலியா தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய தோட்ட வீடமைப்புத் திட்டத்தின் அருகில் காணப்படும் காட்டில் பெரும் தீப் பரவல் ஏற்பட்டுள்ளது. அதில் சுமார் 5 ஏக்கர் வரை தீயில் கருகி நாசமாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## ஆளணிப் பற்றாக்குறையில் கணக்காய்வு அலுவலகம்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறை காரணமாக அலுவலகத்தின் செயற்பாடுகள் தாமதமடைகின்றன என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் 2 ஆயிரத்து 400 பேர் பணிபுரிய வேண்டிய நிலையில் தற்போது ஆயிரத்து 400 அதிகாரிகள் மாத்திரமே காணப்படுகின்றனர்.

மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறை காரணமாக கணக்காய்வு அறிக்கைகளைவெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் அரசாங்க கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)

## புதினம் தெரியுமோ?

மூந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைச்சமாதிரி ஒரு சம்பவம் கிட்டடியில யாழ்ப்பாணத்தில நடந்திருக்கு. திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு கிட்ட இப்ப பின்னேரத்துச் சாப்பாட்டுக் கடையள் நிறைய முளைச்சுக் கொண்டிருக்குது. ஆனால் அந்தச் சாப்பாட்டுக் கடையள் முறையா அனுமதி இல்லாமல் , சின்னச் சின்ன வாகனங்களில இல்லாட்டி தகரக் கொட்டகையில ஒரு செற் போட்டு விதவிதமான சாப்பாடுகளை விக்கினம். சும்மா சொல்லக்கூடாது, அந்தக் கடையளில விக்கிற சாப்பாடுகள் நல்லருசிதான். அதால அந்தப் பக்கம் பின்னேரங்களில கூட்டம் அலைமோதும். ஆனால் கிட்டடியில அங்க இருந்த அப்பக் கடையையும், இன்னொரு கடையையும் நல்லூர் பிரதேசசபைக்காரர் தூக்கினவை.

அந்த இடம் இப்பிடி 'பாஸ்ட் பூட்' (துரித உணவுகள்) விக்கிறதுக்கு நல்ல ஸ்பொட் எண்டதை அறிஞ்சு இப்ப புதிசு புதிசா கனபேர் கடைபோட வெளிக்கிடுகினமாம். அதில நிரந்தரமா ஏதும் செய்தாத்தானே பிரதேசசபைக்காரர் அப்புறப்படுத்துவினம். அதால நடமாடுற வாகனங்களில இந்தக் கடையளைத் திறக்கினமாம். யாழ்ப்பாணக் கச்சேரியில மேல் மட்டத்தில இருக்கிற அதிகாரியின்ர மகனும் ஒரு பெரிய வாகனத்தில அங்க சாப்பாட்டு பிஸ்னஸில இறங்கியிருக்கிறாராம். மற்றப் பெடியள் மாதிரி தேவையில்லாத வேலை பாக்காமல், இப்பிடி சொந்தத் தொழிலில அந்த அதிகாரியின்ர மகன் இறங்கினது நல்ல விசயம் . அவருக்கும் பிஸ்னஸ் நல்ல மாதிரிப் போகுதாம். ஆனால் இப்பிடியெல்லாம் நல்லாப் போகேக்க அதுக்கு கண்ணூறு கழிக்கிற மாதிரி ஒரு காரியம் நடந்திருக்கு.

அந்தச் சாப்பாட்டு வாகனம் வழக்கமா நிண்டு பிஸ்னஸ் செய்யிற இடத்துக்குப் பக்கத்தில ஒரு கடை இருக்கு. அந்தக் கடையின்ர முதலாளி கடையைப் பாக்க காரில வந்திருக்கிறார். வந்தவர் கடைக்குப் பக்கத்தில றோட்டோரமா நிழலா இருந்த இடத்தில காரை நிப்பாட்டிப்போட்டு உள்ளுக்க போட்டார். சிக்கல் என்னெண்டால் அந்த இடத்திலதான் இந்தச் சாப்பாட்டு வாகனம் நிக்கிறது. வழமைமாதிரிப் பின்னேர பிஸ்னஸுக்கு வாகனம் வந்தால், அந்த இடத்தில கார் நிண்டிருக்கு. உடன அதிகாரியின்ர மகன், அப்பாவுக்கு கோல் பண்ணி விசயத்தைச் சொல்லி இருக்கிறார். கச்சேரி அதிகாரி சும்மாவே கோபக்காரர். உடனேயே அந்தக் கடைக்காரருக்கு கோல்பண்ணி 'என்ன செய்வன் தெரியுமோ? என்னெண்டு அந்த இடத்தில காரை விடுவாய்? உங்களையெல்லாம் எஸ்.ரி.எப்பை (அதிரடிப் படையை) வைச்சுத் தூக்குவன்' எண்டு எகிறிக் குதிச்சிருக்கிறார். ' நான் நிழலா இருக்குதே எண்டு கடைக்குப் பக்கத்தில காரை விட்டது ஒரு குற்றமா?' எண்டு கடைக்காரரும் பதிலுக்கு கத்திப்போட்டு, அவர் பாதுகாப்பு அமைச்சின்ர மேலிடத்தின்ர காதில இந்த விசயத்தை போட்டிருக்கிறாராம்.

வழக்கமா சாப்பாட்டு வாகனம் விடுற இடத்தில கார்நிண்டால், கொஞ்சம்தள்ளிதங்கட வாகனத்தை அவை விட்டிருந்தால் சோலி இல்லையே. அவை வழக்கமா கார் விடுற இடத்தில இவையள் இப்பதான் சாப்பாட்டு வாகனத்தை கொண்டந்திட்டு, சண்டித்தனம் காட்டினது அவ்வளவு நல்லதில்லைக் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி : புதுவருடப் பலன்கள்

## மீனம்



மேல் தட்டு மக்களை விட குடிசையில் வாழ்பவர்களுக்காக அதிகம் யோசிப்பவர்களே! குரோதிவருடம் உங்கள் ராசிக்கு சுகஸ்தானத்தில் பிறப்பதால் சின்னச் சின்னக் கனவுகளெல்லாம் நனவாகும். மாதக் கணக்கில் தள்ளிப் போன காரியங்களெல்லாம் விரைந்து முடிவடையும்.

இந்தப் புத்தாண்டு சுக்ரன் மற்றும் புதன் ஆகிய கிரகங்கள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும் நேரத்தில் பிறப்பதால் உங்கள் செயலில் வேகம் கூடும். மனதில் அமைதி உண்டாகும். பேச்சில் கனிவு பிறக்கும். பிள்ளைகளுக்கு சொத்து சேர்க்கவேண்டும் என நினைப்பீர்கள்.

30.04.2024 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு தனஸ்தானத்தில் அமர்ந்திருப்பதால் மகிழ்ச்சியான சூழ்நிலை உண்டாகும். பணவரவு உண்டு. உடல் நலம் சீராகும். சோர்ந்திருந்த நீங்கள் இனி உற்சாகமடைவீர்கள்.

01.05.2024 முதல் வருடம் முடியும் வரை குரு ராசிக்கு 3இல் அமர்வதால் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப் பாருங்கள்.

இந்த வருடம் முழுவதுமாக சனி 12இல் மறைந்து ஏழரைச் சனியின் தொடக்கமான, விரயச் சனியாகத் தொடர்வதால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியுமோ, முடியாதோ என்றெல்லாம் சில நேரங்களில் சங்கடப்படுவீர்கள்.

இந்தக் குரோதி வருடம் முழுவதும் உங்கள் ஜென்ம ராசியிலேயே ராகுவும், 7இல் கேதுவும் தொடர்வதால் உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம்.

வியாபாரத்தில் இழப்புகளைச் சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் இருந்த அலட்சியப் போக்கு மாறும். தடைப்பட்டிருந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களுடைய ஆளுமைத் திறன் பாராட்டிப் பேசப்படும்.

இந்தக் குரோதி ஆண்டு அனைத்திலும் வெற்றி பெற வைப்பதுடன், பணம், பதவியையும் அள்ளித் தருவதாகவும் வாழ்வில் புதிய சகாப்தத்தையும் படைக்கும் வல்லமையையும் தரும்.

# கறுவாவுக்கு பதில் மின்சார வாகனம்



கொழும்பு, ஏப்.30

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் வாகன உற்பத்தி தொடர்பான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் சீன வர்த்தகத் தூதுக்குழுவினருக்குமிடையே அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வாகன உற்பத்தி, விவசாயத்துறை, காகித உற்பத்தி மற்றும் அச்சுத்துறை போன்ற விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளன. சீனாவுக்கு தரமான கறுவாவை ஏற்றுமதி செய்து அதற்குப்பதிலாக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய ஆலோசிக்கப் படுகின்றது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (எ-6)

# இந்திய இசைப் போட்டியில் மலையக இளைஞன் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.30

இந்தியத் தொலைக்காட்சி நடத்தும் இசைப் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கான குரல் தேர்வில் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் தெரிவாகியுள்ளார்.

மலையக மண்ணில் இருந்து பூனாகலை கபரகலையூரைச் சேர்ந்த இந்திரஜித் என்ற தமிழ் இளைஞரே இசைப் போட்டி நிகழ்ச்சியின் முதல்கட்ட குரல் தேர்வில் தேர்வாகியுள்ளார்.

அதேவேளை, இந்தியத் தனியார் தொலைக்காட்சி ஒன்று நடத்திய இசை நிகழ்ச்சியின் கடந்த போட்டித் தொடரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கில்மிஷா, மலையகத்தைச் சேர்ந்த அசானி ஆகியோர் முன்னர் பங்குபற்றியிருந்தனர். (எ-100)

# சொற்பொழிவு

பன்னாலை, ஏப். 30

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-3 சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தைத் தொடர்ந்து, 'மாணிக்கவாசகரும் திருவண்டப்பகுதியும்' என்னும் விடயப்பொருளில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் நித்திய பாபுதரன் சொற்பொழிவை ஆற்றுவார். (ப)

*** *** ***

யாழ்ப்பாணம், ஏப். 30

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு, ஆலய சண்முக விலாச மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.30

வட்டு.மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கத்தின் 91ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத்தெரிவும் சங்கத் தலைவர் த. நாராயணன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தலைவராக த.நாராயணன், உபதலைவராக சீவரட்ணம் கணேசரட்ணம், பொருளாளராக வே.சுப்பிரமணியம், உபபொருளாளராக நா.நாகசெல்வம், செயலாளராக ப.அருள்ராசன், நிர்வாக உறுப்பினர்களாக கோமலராஜ் நிரோஜினி, இராமச்சந்திரன் மிதுஷா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ப)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு நல்லபடி முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறனும் அதிகரிக்கும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்பு தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். தாய்வழி உறவினர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது நல்லது.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் கடன்கள் விஷயத்திலும் சற்று கவனம் செலுத்துவது நல்லது. சிலருக்கு தந்தைவழி உறவினர்கள் மூலம் தேவையற்ற பிரச்னைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெளிவேஷ நினைவேந்தல்?


தந்தை செல்வாவின் நினைவுநாள் கடந்த சில தினங்களாக வடக்கு - கிழக்கில் பரவலாகக் கடைப்பிடிக் கப்பட்டிருக்கின்றது. இந்த நிகழ்வை தமிழரசுக் கட்சியினர், தந்தை செல்வா நினைவுக் குழுவினர் ஒழுங்கமைத்தி ருந்தனர். தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியை இன்று நீதி மன்றப்படியேற்றி திரிசங்கு நிலையில் நிறுத்திவிட்டு அவரின் நினைவுநாளை எந்தக் கூச்சமுமின்றி அவரது கட்சியினரால் எவ்வாறு நினைவுகூர முடிந்திருக்கின்றது? தந்தை செல்வாவின் வழியில் பயணிப்பதாகச் சொல் லிக்கொண்டு அவரது நடைமுறைகளைப்பற்றி வகுப்பெடுத்துக்கொண்டு நினைவுநாளை இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் கடைப்பிடித்திருக்கின்றனர். தந்தை செல்வாவை உளப்பூர்வமாக அந்தக் கட்சியினர் யாராவது நினைவு கூர்ந்திருந்தால், கட்சியின் இன்றைய நிலையை எண்ணித் துடித்திருப்பர். ஆனால் அப்படி எவரும் துடிக்கவில்லை. எனவே கட்சியினர் அனைவரும் வெறும் சம்பிரதாயத்துக்காகவே தந்தை செல்வாவின் நினைவுநாளைக் கடைப்பிடித்தனர் என்று எண்ண வேண்டியிருக்கின்றது.

தந்தை செல்வாவின் நினைவுநாள் நிகழ்வு தமிழரசுக் கட்சியின் திருகோணமலை கிளையின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திருகோணம லைக்கும் அந்தக் கட்சிக்கும் நீண்ட தொடர்பிருக்கின்றது. இப்போதும்கூட கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்று தலைவர் தெரிவு நடைபெற்றதும் திருகோணமலை மண்ணில்தான். அந்த மண்ணில்தான் கட்சியின் தலைவர் தெரிவுக்கு எதிராக வழக்குத் தாக் கலும் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நினைவுநாளில் தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் (தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதிவின்படி) மாவை.சோ.சேனாதிராசா, திருகோணமலையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், அந்தத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங் கேற்றனர்.

இங்கு உரையாற்றிய சுமந்திரன், 'தந்தை செல்வா, அப்போதைய பிரதமர்களான பண்டா, டட்லியுடன் ஒப்பந்தங்களைச் செய்தபோது சுயாட்சியை அது உள்ள டக்கியிருக்கவில்லை. இப்போது அவ்வாறு ஒப்பந்தத்தை செய்தால் சொந்தக் கட்சியினரே துரோகிகள் என்று வசை பாடுவார்கள்' எனச் சுட்டிக்காட்டியிருந்தார். அவர் சொல்வது உண்மைதான். நல்லாட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரால் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், கட்சியின் தலைவராக இருந்த சம்பந்தனும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் பங்கேற்றனர். இவர்களால் கூட்டாட்சி என்று சொல்லப்படுகின்ற அரசமைப்பை உருவாக்க முடிய வில்லை. அதேபோல வடக்கு- கிழக்கு இணைப்பை வலியு றுத்தும் புதிய அரசமைப்பை உருவாக்க முடியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக பௌத்தத்துக்கு முதலிடம் என்பதை நீக்கி மதச்சார்பற்ற நாடாகக் கொண்டு வரமுடியவில்லை. இவற்றையெல்லாம் விட்டுக் கொடுத்துவிட்டு, ஏக்கிய ராஜ்ஜிய / ஒருமித்த நாடு என்ற ஒன்றைக்கொண்டு வந்து அதுதான் சமஷ்டி என்று சொன்னார்கள். சமஷ்டி என்று இல்லையே ஒழிய சமஷ்டியின் குணாதிசயங்கள் அனைத்தும் உண்டு என்றார்கள். இதைத்தான் அவரது கட்சியினரும் மக்களும் எதிர்த்தார்கள். துரோகி என்றார்கள்.

தந்தை செல்வநாயகம் தங்களுக்கான விட்டுக் கொடுப்பற்ற ஒரு தலைவர் என்பதை தமிழ் மக்கள் முழுமையாக நம்பினார்கள். தனது சுகத்தை துறந்து தங்களின் விடிவுக்காகவே அவர் செயற்படுவார் என்பதில் தமிழ் மக்களுக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. அவர் சுயாட்சியை விட்டுக்கொடுத்துவிட்டு தங்களை சிங்களவர்களிடம் அடகு வைத்துவிடுவார் என்று தமிழ் மக்களுக்கு எந்தவொரு கணத்திலும் சிந்தனை ஏற்பட்டதில்லை.

**நம்பிக்கை என்பது இயல்பாகவே அவர்களது செயற் பாடுகளின் அடிப்படையில் மக்களிடம் கட்டியெழுப் பப்படுவது. ஆனால் சம்பந்தன் மீதோ, சுமந்திரன் மீதோ தமிழ் மக்களுக்கு அப்படியொரு நம்பிக்கை ஏற்பட வில்லை. ஏற்படப்போவதுமில்லை. இப்போது வரையில் அதுதான் நிலைமை.**



# சராசரி இறப்பு வீதம் இலங்கையில் அதிகரிப்பு

**கொழும்பு, ஏப்.30**

**இலங்கையில் சராசரி இறப்பு வீதம் அதிகரித்துள்ள நிலையில், சரா சரிப் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று தரவுகள் வெளி யாகியுள்ளன.**

பொருளாதார நெருக்கடி காரணமாக உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்ளமுடியாது, பல்வேறு நோய் நிலைமைகளுக்கு ஆளாதல், மனநலப் பிரச்சினை அதிகரிப்பது போன்ற காரணங்களால் உயிரிழப்பவர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது என்று சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் சட்டத்தரணி லக் சிக்கா கணேபொல தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டளவில் நாட்டில் சராசரி இறப்பு எண்ணிக்கை ஒரு லட்சத்து 40 ஆயிர மாகக் காணப்பட்டது. தற்போது அந்த எண் ணிக்கை ஒரு லட்சத்து 80 ஆயிரம் ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, 2020ஆம் ஆண்டளவில் நாட் டின் பிறப்பு எண்ணிக்கை 3 லட்சத்து 25 ஆயி ரமாகக் காணப்பட்ட நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை 2 லட்சத்து 80 ஆயிரமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (எ-இ)

# யாழ். – நாகப்பட்டினம் கப்பல் சேவை மே மாதம்

காங்கேசன்துறை மற்றும் நாகப்பட்டினத்துக்கு இடையி லான பயணிகள் கப்பல் சேவையை எதிர்வரும்13ஆம் திகதி மீள ஆரம்பிக்கத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் பயணிக்கும் பயணி யொருவர் 60 கிலோகிராம் எடையுடைய பொருள்களை எடுத்துச்செல்வதற்கும் சந்தர்ப் பம் வழங்கப்படவுள்ளது. ஆயி னும் பொதியொன்றின் எடை 20 கிலோகிராமுக்கு உட்பட்ட தாக அமையவேண்டும் என வும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# ஈ.பி.எவ். வட்டியை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, ஏப்.30

ஊழியர் சேமலாப நிதி யத்துக்காக வழங்கப்ப டும் வட்டி வீதத்தை 9 சதவீதத்தில் இருந்து 13 சதவீதமாக உயர்த்த அரசாங்கம் தீர்மானித் துள்ளது என்று நிதி இரா ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரி வித்துள்ளார்.

2023ஆம் ஆண்டுக் காக ஊழியர் சேமலாப நிதியம் ஊடாக முதலீடு செய்து ஈட்டிய பணத்தில் 9 சதவீதத்துக்குப் பதி லாக 13 சதவீதத்தை வட்டியாகத் செலுத்த தயாராக உள்ளோம் - என்றார். (எ-இ)

# இலங்கை வருகிறார் யோகோ கமிகாவா

ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா இலங்கைக்கு உத் தியோகபூர்வ பயணம் மேற்கொள்ள வுள்ளார். இவர் எதிர்வரும் 4ஆம் திகதியும், 5ஆம் திகதியும் இலங்கை யில் தங்கியிருப்பார்.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற் றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை மரியாதை நிமித்தமாக சந்திக்க உள்ளார். (எ-இ)

# 10 வீதத்தினருக்கு சிறுநீரக நோய்

கொழும்பு, ஏப்.30

இலங்கையின் சனத் தொகையில் 10 சதவீத மானோர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட் டுள்ளனர் என்று அகில இலங்கை சிறுநீரக நோயாளர் சங்கத்தின் பிரதம மருத்துவர் சஞ் சய ஹெய்யன்துடுவ தெரிவித்துள்ளார். (எ-இ)

## நாளை

01.04.2024

**புதன்கிழமை**

**சித்திரை - 18**

மே தினம்

சுபநேரம் : 04.27 - 05.57

ராகுகாலம் : 11.57 - 01.27

## நாளொரு நல்வார்த்தை

**நம்பிக்கைவாதி ஒவ்வொரு சிக்கலிலும் ஒரு வழியைக் கண்டுபிடிப்பான் அவநம்பிக்கைவாதி ஒவ்வொரு வழியிலும் ஒரு சிக்கலைக் கண்டுபிடிப்பான்**

**-வின்ஸ்டன் சேர்ச்சில்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனைக்கு உதவாத அரிசி; நடவடிக்கை எடுக்கப்படும்!

முல்லை. மாவட்டச் செயலர் தெரிவிப்பு


**முல்லைத்தீவு, ஏப்.30**

**குறைந்த வருமானம் பெறுவோருக்கான அரிசி விநியோகத்தில் பாவனைக்கு உதவாத அரிசி வழங்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ. உமா மகேஸ்வரன் தெரிவித்தார்.**

அரசாங்கத்தால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு அரிசி விநியோகம் இடம்பெற்றுவரும் நிலையில் சில இடங்களில் காலாவதியான பாவனைக்கு உதவாத அரிசி வழங்கப்படுகின்றது என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

எட்டுக்கும் மேற்பட்டவர்கள் அரிசி விநியோகத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், ஒருவருடைய நிலையத்தில் சுமார் 800 பைகள் பாவனைக்கு உதவாதவை எனக் கண்டறியப்பட்டுள்ளன. பாவனைக்கு உதவாத அரிசி தமக்கு வழங்கப்பட்டுள்ளது என்று சந்தேகிக்கும் பயனாளிகள் அதனை விநியோகித்தவர்கள் தொடர்பாக முழுமையான தகவல்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தரமற்ற அரிசி வழங்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளரைத் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார். (எ-20)



# உடைமையில் கசிப்பு மூவர் கைது


யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ். மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுமலைப் பகுதியில் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 36 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுதுமலை தெற்குப் பகுதியில் விசேட வீதிச் சோதனை நடவடிக்கைகளின் போது கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொல்புரம் மத்தி பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும், அவரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)



கடந்த பரீட்சைகளில் முன்னிலை சித்தி பெற்ற பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள், கிளிநொச்சி இயக்கச்சி மல்லியில் கிருஷ்ணன் கோவிலில் இடம்பெற்ற அறங்காவலர் தின நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர். கடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாவட்டத்தில் முன்னிலை பெற்று மருத்துவபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பளை மத்திய கல்லூரி மாணவர்கள் இருவர், க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 9 பாடங்களில் அதிசிறப்புச் சித்தி பெற்ற பளை மத்திய கல்லூரி மாணவி, ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற மாசார் பாடசாலை மாணவன் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். (எ-9)

# தோட்டத்தொழிலாளருக்கு சம்பள உயர்வுக்கு மறுப்பு

கொழும்பு, ஏப். 30

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா நாள் சம்பளம் வழங்குவதற்கு தோட்ட முதலாளிமார் சம்மேளனம் மறுப்புத் தெரிவித்துள்ளதாக தொழில் ஆணையாளர் ஜெயசுந்தர தெரிவித்துள்ளார். வரவு அடிப்படையிலும், பறிக்கும் கொழுந்தின் அளவின் அடிப்படையிலுமே சம்பள அதிகரிப்பு வழங்கமுடியுமெனவும் நாள் சம்பளமாக 1700 ரூபா வழங்கமுடியாதெனவும் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளதாக தொழில் ஆணையாளர் தெரிவித்துள்ளார். ஆயிரத்து 700ரூபா நாள் சம்பளம் வழங்கும் பட்சத்தில் உற்பத்தி பாதிக்கப்படும் எனவும் பெருந்தோட்டக் கம்பனிகள் நட்டத்தை எதிர்கொள்ளும் எனவும் முதலாளிமார் சம்மேளனத் தலைவர் ரொஷான் இராஜதுரை தெரிவித்துள்ளார். தற்போது தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு சம்பளமாக ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. நிதிப்பற்றாக்குறை காரணமாக பல தோட்டத்தொழிலாளர்கள் தமது பிள்ளைகளை பாடசாலையிலிருந்து இடைநிறுத்தியுள்ளனர் என சமூகசேவை நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ-6)




யாழ். புங்குடுதீவு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (எ-இ)


ஜேர்மன் ஆய்வுக் கப்பல்

# கொழும்பு வருவதற்கு சீனா கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 30

ஜேர்மன் ஆய்வுக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரிக்கவுள்ளது. இந்தக் கப்பலின் வருகைக்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்புவதற்காகவே கொழும்பு துறைமுகத்துக்கு இந்தக் கப்பல் வருவதாகக் கூறப்படுகி றது. இலங்கைக் கடற்பரப்பில் வெளிநாட்டுக் கப்பல்கள் ஆய்வு செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் எரிபொருள் நிரப்புவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் எனவும் இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்நிலையில் ஜேர்மன் கப்பல் இரண்டாவது தடவையாக கொழும்புத் துறைமுகத்துக்கு வருகிறது. இதற்கே சீனா எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. (ஒ-6)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'அரும்பு' கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் இந்த வருடம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச விஞ்ஞான பாடக் கருத்தரங்கு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-66)

# மாற்றம் என்னால் ஏற்படுத்தப்படலாம்

சுவீடனில் அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30

மக்கள் மாற்றம் தேவையென நினைக்கின்றனர். அந்த மாற்றத்தை என்னூடாக ஏற்படுத்தலாம். இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சுவீடனுக்குச் சென்றுள்ள அநுர அங்குள்ள புலம்பெயர் இலங்கையர்களைச் சந்தித்து கலந்துரையாடல் நடத்தினார். இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

'2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் புலம்பெயர் மக்கள் கோத்தாபய ராஜபக்சவை ஆதரித்தனர். அதேபோன்று இம்முறை என்னை ஆதரிக்கவேண்டும். நீங்கள் இலங்கைக்கு வந்து வாக்களிக்கவேண்டும். ஆகக்குறைந்தது நாட்டிலுள்ளவர்களுக்கு மாற்றத்துக்கு வாக்களிக்கக்கோரவேண்டும். மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். அந்த மாற்றத்தை என்னூடாக ஏற்படுத்தலாம்' என்றார் அநுர. (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முரண்பாடுகளைச் சீர்செய்யாவிடில்

# தமிழரசுக் கட்சியினருக்கு ஓர் ஆசனமும் சந்தேகமே!

## யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கணேசலிங்கம் எதிர்வுகூறல்

கொழும்பு, ஏப். 30
தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை விரைந்து சீர்செய்யாதுவிடில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் தமிழரசுக் கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பமும் இல்லாமற்போகும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத்தலைவர் தந்தை செல்வாவின் 47ஆவது ஆண்டு நினைவேந்தலும், நினைவுப் பேருரையும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டபோதே பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் இவ்வாறு நினைவுப் பேருரை ஆற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியை நீதிமன்றத்தில் கொண்டு சென்று நிறுத்தியவர்கள் பொது மக்களல்லர். எதிரிகளல்லர். விரோதிகளல்லர். கட்சிக்குள்ளிருந்தவர்களே நீதிமன்றத்தில் கொண்டு சென்று நிறுத்தினார்கள். கட்சிக்குள்ளிருந்து முரண்பாடுகளையும், பகைமைகளையும், அவாக்களையும் கொண்டிருந்தவர்களும், தங்கள் நலன்கள் சாத்தியப்படவில்லை என்ற எண்ணங்களைக்கொண்டவர்களும்தான் இதற்குக் காரணமானவர்கள். இதனைத் தோற்கடிப்பதற்கான வழிமுறைகளாக தமிழரசுக் கட்சியைக் காப்பதற்காக வீதிக்கு வருதல் வேண்டும். மக்களை அணிதிரட்ட வேண்டும். மக்களுடன் ஒன்றுசேர்ந்து நீதிமன்றத்தின் குற்றச் சாட்டுகளை முடிவுக்குக் கொண்டு வருதல்வேண்டும். தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிறீதரனும், ஏனைய கட்சி நிர்வாகிகளும் இதனைத் தங்கள் எண்ணமாகக் கொண்டு செயற்படவேண்டும். இதன்மூலம் ஈழத்தமிழர்கள் தங்கள் இருப்பில் ஏதாவது மாற்றம் நிகழுமென்ற நம்பிக்கையுடன் புலம்பெயர்வை நிறுத்திவிட்டு ஆரோக்கியமான நம்பிக்கைகளுடன் பயணிப்பதற்கானதொரு சூழல் உருவாகும். தமிழரசுக் கட்சிக்குள் நெருக்கடிகள் ஏற்பட்டபோது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?, உங்களால் ஏன் இதற்குத் தீர்வு காண முடியவில்லை?, கட்சியின் உறுப்புரிமைக்கு உரித்துடைய ஒவ்வொருவரையும் உங்களால் ஏன் கட்டுப்படுத்திவைத்திருக்க முடியவில்லை? போன்ற பல விமர்சனங்கள் கட்சியின் மூத்த தலைவர்கள், மூத்த உறுப்பினர்கள் மீது முன்வைக்கப்பட்டன. இந்த விமர்சனங்களைத் தவறானது என்றுகூட நான் கருதமாட்டேன்.

### வலிகளைக்கண்டு பயணிக்கும் கட்சி

தந்தை செல்வாவால் ஒரு தீர்க்கதரிசனத்துடன் கட்டமைக்கப்பட்ட கட்சியாகத் தமிழரசுக் கட்சி விளங்குகிறது. அதுமாத்திரமல்லாமல் இந்தக் கட்சி ஈழத்தமிழ்மக்களின் அரசியல் பயணத்தில் கணிசமான துயரங்களையும், வலிகளையும் அனுபவித்திருக்கிறது.

கட்சிகள் தங்களுக்குள் மோதிக்கொள்வது அல்லது தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய எல்லைக்குள் தங்களுடைய போட்டித் தன்மைகளை முதன்மைப்படுத்திக் கொள்வது நியாயமானதுதான். ஆனால், தேசத்துடன், தேசிய இனத்துடன் சேர்ந்து பயணிக்கவேண்டிய பொறுப்பாண்மையுடைய ஒரு கட்சி வாழாவெட்டியாக இருப்பது அல்லது காணாமற்போதல் என்பது தமிழினத்துக்கே பெரும் தோல்வியாக அமையும்.

1949 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை நிறைய ஏற்ற இறக்கங்களுடன் தான் தமிழரசுக் கட்சி பயணித்தது. எனினும் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கட்சிக்கு நிறைய வாய்ப்புக்கிடைத்தது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்திருந்த நிலையில் ஒரு ஆரோக்கியமான அரசியல் பயணத்தைச் செய்வதற்கானதொரு களம் திறந்தேயிருந்தது. இன்றும் அந்தக் களம் திறந்தேயுள்ளது. அந்தக் களத்தில் மக்களை அணிதிரட்டிப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பைத் தமிழரசுக் கட்சியின் தலைமைகளும், மூத்த உறுப்பினர்களும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றார். (ம-66)


**வேலையாளர் தேவை**

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு பின்வரும் **வேலையாட்கள் தேவை.**

- **சமையலாளர்** (தங்கி நின்று வேலை செய்யக் கூடியவர்).
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்.**

தொடர்பு :- 075 771 8503

(CS/54869) J-1

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணம் - கொழும்பு பேருந்து ஆசனப் பதிவாளர் தேவை.

தொடர்பு:- 075 771 8523

(CS/54869) J-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 08 . 1936

மறைவு 29 . 04 . 2024

### தில்லையம்பலம் செல்வமணி (செல்லக்கா)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், அரச வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் செல்வமணி நேற்று (29.04.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தில்லையம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் (மலேசியா), செல்வராயு (மலேசியா), செல்வநாதலிங்கம் (மலேசியா), புஸ்பலீலா, ஞானமணி, செல்லத்துரை மற்றும் பொன்னம்பலம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவிச்சந்திரன் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (நோர்வே), காலஞ்சென்றவர்களான கலாவதி, இளங்கோவன் மற்றும் ஜனனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சித்திராதேவி மற்றும் சாந்தினி (நோர்வே), ஜெகதீஸ்வரன், குணசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனார்த்தனன் (ஜேர்மனி), திவாகரன் (ஜேர்மனி), ஷர்மிலா (நோர்வே), சோபனா (நோர்வே), பிரியங்கா (நோர்வே), ஜெனோஜினி (கனடா), ஜெதுர்ஜினி, பிரவீனா (கனடா), பிரவீனன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதிரா (கனடா), அகரன் (கனடா), ஈடன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2024) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 074 125 8603
077 869 9086

தகவல்:
குடும்பத்தினர்

### யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் விசேட அறிவித்தல்

எதிர்வரும் 01.05.2024 மேதினத்தைக் கருத்தில் கொண்டு அன்றையதினம் சகல சிகை ஒப்பனையகங்களையும் மூடி ஒத்துழைப்புத் தருமாறு சங்கத்தால் அறியத் தருகின்றோம்.

நன்றி

**தலைவர்.**

(CS/54868) J-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 27 . 04 . 1932

ஆண்டவன் அடியில் 22 . 04 . 2022



### அமிர்தலிங்கம் தங்கம்மா

எம் அன்பிற்கினிய அம்மாவே!
எம் ஆசைத் தங்கமே!
உற்றவளாய் எம்மோடு என்றும்
உடனிருந்த பெற்றவளே!
ஆண்டிரண்டு அகன்று
போயிடினும்,
அனுதினமும் எமக்கு உம்
நினைவே!
காற்றாய் கனத்தே கலந்த நம்
குலவிளக்கே!
வற்றாத விழிநீர்
சொரிகின்றோம் இங்கே
நற்றாயாய் நானிலத்தில்
இருந்த பெரும் சொத்தே
நற்பேறு பெற்று இறையடியில்
இணைந்திருங்கள் அம்மா.


உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

[illegible] வீதி,
கொடிகாமம்.

(CR/42314) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சரவணமுத்து ஆறுமுகம்**

**(இளைப்பாறிய நகர அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.04.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

**22, முருகன் கோவிலடி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

(cs.54874) (N-1)

**குடும்பத்தினர்**
**077 255 0807**


# தேசிய அரசியலோட்டம் தமிழர்களுக்குத் தேவை

## சட்டத்தரணி சுவஸ்திகா சுட்டிக்காட்டு

வடக்கு - கிழக்கைத் தாண்டி, தேசியக் கட்சிகளுடன் தமிழ்ப் பொதுவேட்பாளர் செயற்படும்போதே ஆரோக்கியமான மாற்றங்களை உருவாக்கலாம் என்று சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் தெரிவித்துள்ளார்.

சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே சட்டத்தரணி சுவஸ்திகா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்ற கருத்தியல் தற்பொழுது மேலெழுந்துள்ளது. தமிழ்ப் பொதுவேட்பாளர் மூலம் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கப்படும் என்றால் அது வரவேற்கத்தக்கது. ஆனால், அவ்வாறு களமிறங்கும் பொதுவேட்பாளர் வெறும் இரண்டு சதவீத வாக்கையே பெற்றுக்கொள்வார் எனப்படுகின்றது. ஆக, நிறுத்தப்படுகின்ற பொதுவேட்பாளர் நிச்சயமாக வெற்றிபெறப்போவதில்லை. அதேநேரம் இந்தப் பொறிமுறை மூலம் தமிழ்பேசும் மக்களினுடைய பிரச்சினைகள்கூட வெளிவரப்போவதில்லை. பொதுவேட்பாளர் என்ற திட்டத்தை முன்வைக்கும் தமிழ்த் தலைவர்கள் தீர்க்கமாகக் கலந்துரையாடித்தான் இந்த முடிவை எடுத்தார்களா என்ற சந்தேகம் மேலெழுகின்றது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது எமது பிரச்சினை களை எவ்வளவு தூரம் வெளிக்கொண்டுவரும் என்பது சந்தேகத்துக்குரியதே. ஆதலால், தேசியக் கட்சிகளுடன் இணைந்து தமிழ்ப் பொதுவேட்பாளர் செயற்படும் போதே எமது பேரம்பேசல்களை மேற்கொள்ள முடியும். இவ்வாறான ஆரோக்கியமான அரசியலை நோக்கி நாம் நகர வேண்டும் - என்றார். (ம-125)


**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி **(Show Money)** வசதிகள்

**தொடர்புகளுக்கு:**

**074 173 7684**



# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் அதிபர் திரு சி.இந்திரகுமார் அவர்களின்
பாசமிகு தாயார்

**சிவபாலன் மகேஸ்வரி** அவர்கள்

கடந்த 24.04.2024 அன்று காலமானார். அன்னாரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

(CS/54871) J-1


# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of Public Bathroom near the OPD Pharmacy, Renovation works of Public Bathroom near the workshop, valley Gutter fixing infront of ward 24,Waste Management plant Entrance Gate . | 1500.00 | 56,000.00 | 91 | 2.80 | C8 |
| 2. | Canopy Roof work at Kitchen Building & Toilet Renovation at CCU Unit,Ceiling & Roof work at Ward 18. | 1500.00 | 62,000.00 | 91 | 3.12 | C8 |
| 3. | Carpet Road for Medical Complex porch to Gate No 09. | 1500.00 | 87,000.00 | 91 | 4.36 | C8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 02.05.2024 up to 15.05.2024 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 16.05.2024, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
30.04.2024.

(cr.42312) (N-1)


# மரண அறிவித்தல்



**வைத்தீஸ்வரன் ரஞ்சிதமலர்**

கோப்பாய் தெற்கு, கற்பகப்பிள்ளையார் கோவிலடியை வதிவிடமாகக் கொண்ட வைத்தீஸ்வரன் ரஞ்சிதமலர் அவர்கள் 28.04.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் வேதாரணியக்குருக்கள்-மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், தியாகராசா - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகளும், வைத்தீஸ்வரன் அவர்களின் பாசமிகு மனைவியும், சறோஜா, சுசிலா, உ்சா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயராணி பாலச்சந்திரக் குருக்கள், பாலசுப்பிர மணியம், முத்துச்சாமி, ராஜேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருநாவுக்கரசு, சுந்தரி, காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் கெங்காதரன், சுமத்திராதேவி, குமுத வல்லி, சற்குணராசா, சிவராசா, சித்திரா, கமலா ஆகியோரின் மைத்துனியும், ஜெயக்குமார், பவானந்தம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவகாயத்திரி, லகிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று திங்கட்கிழமை (29.04.2024) பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
கணவர் - தியாகராஜா வைத்தீஸ்வரன்
(உசா பான்சி ஹவுஸ்)
077 223 6063

கற்பகம் பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(CS/54873) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை பிரதேச மீள்குடியேற்ற கிராமங்களான தையிட்டி, பளைவீமன்காமம், வறுத்தவிளான், மயிலிட்டி, மாவிட்டபுரத்தைச் சார்ந்த செவ்வந்தி அருவி பூந்தளிர் வாணி தாய்மார் கழகங்களின் பிரதிநிதிகளுக்கு, பெண்களை அதிகளவில் தாக்கும் புற்றுநோய்களை ஆரம்பத்தில் கண்டறிவதற்கான வழிமுறைகள் சுய மற்றும் சுக வனிதையர் சிகிச்சை நிலையப் பரிசோதனைகள், அவற்றை முற்றிலும் குணமாக்கும் வாய்ப்புகள் தொடர்பான செயலமர்வு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-125)



தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடமையாற்றி, இடமாற்றம் பெற்றுச் சென்ற, து.ஜெயதேவனின் சேவைநலன் பாராட்டு விழா, தென்மராட்சிக் கல்வி வலய தமிழ்த்துறை ஆசிரியர்களின் ஏற்பாட்டில், ஆசிரியர் எஸ். சுந்தரமூர்த்தி தலைமையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-159)



குப்பிழானைச் சேர்ந்த, மறைந்த முதுபெரும் எழுத்தாளர் ஐ.சண்முகனின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு மற்றும் குப்பிழான் ஐ.சண்முகனின் இரசனைக் குறிப்புகள், சிறுகதைகள் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா என்பன குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரம மண்டபத்தில் ஓய்வுநிலைக் கிராம அலுவலர் சோ.பரமநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. (ப-66)

ஊடகவியலாளர் தராகி சிவராமின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அமையத்தின் செயலாளர் ப.கார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் நடராசா ஜனகதீபன் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். (ப-110)






மாகாண மட்ட ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்ற, வரணி மத்திய கல்லூரி மாணவனைக் கௌரவிக்கும் நிகழ்வு, கல்லூரி மண்டபத்தில் அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-இ)



துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவு விழா, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வளாகத்திலுள்ள அன்னபூரணி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி விநியோகத்தை கண்காணிக்கக் குழு

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்.மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி விநியோகத்தைக் கண்காணிக்க வேண்டும் என்று பிரதேச செயலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், மாவட்ட மட்டத்தில் உரிய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழு மூலம் மேற்பார்வை செய்யப்படுகின்றது என்று யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக உரிய தரத்திலும், நிறையிலும் அரிசி கிடைக்கப் பெற்றமை தொடர்பான அறிக்கையை மாவட்டச் செயலருக்கு வழங் வேண்டும். அரிசி வழங்குவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப்பட்டியலைத் தமிழ்மொழியில் கிராம அலுவலர்களின் அலுவலகங்களில் காட்சிப்படுத்துமாறும், சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிக்கமையாத, தரமற்ற மற்றும் நிறை குறைவான அரிசி, அரிசி ஆலை உரிமையாளர்களால் விநியோகிக்கப்பட்டால் உடனடியாகக் குறித்த அரிசி கையேற்பதை நிறுத்தி அதுதொடர்பில் மாவட்டச் செயலருக்கு அறிக்கையிடுமாறும் பிரதேச செயலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் -என்றுள்ளது. (ப-66)

THE ROYAL COLLEGE OF JAFFNA

10th ஆண்டு மாணவர்களுக்கான புதிய பிரிவு ஆரம்பமாகியுள்ளது. **விரும்பிய பாடத் தெரிவு. சிறு குழுக்களாக மட்டும்.**

பிரான் பற்று வீதி, குபேரன் கட்ட மாடி, சங்கானை.

077 675 1649

## கேள்வி அறிவித்தல்.
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டம் - 2024 பராமரிப்பு வேலைக்கான நிதி

1. வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டம் - 2024 பராமரிப்பு வேலைக்கான நிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**, சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி புனரமைத்தல் வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது. கேள்வி [illegible] பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான [illegible] தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் தொலைபேசி இல: - 021-205 8867** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2024.04.30 ஆம் திகதியில் இருந்து 2024.05.14 ஆம் திகதி வரை கேள்வி ஆவ்ணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** அவர்களிடமிருந்து 2024.04.30 ஆம் திகதியிலிருந்து 2024.05.14 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2500/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2024.05.15 ஆம் திகதி பி.ப 14:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி. கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம். கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது
9. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.05.10 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.


| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம |
| NP/14/41(13)/2/APDP /2024/01 | குமாரசாமி வீதி புனரமைத்தல் - புத்தூர் | 3.15 | 60 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 32,000.00 | 2024.07.30 |

**தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.
2024.04.30**

(cr.42312) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 03 . 1943



மறைவு 29 . 04 . 2024

### தம்பையா மகேஸ்வரன்

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் இலகடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா மகேஸ்வரன் 29.04.2024 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-சிவஞானம் தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம்-கனகம்மா தம்பதியரின் மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் சிவரஞ்சினி (ஆசிரியை யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை, காரைநகர்), சிவசாம்பவி (ஆசிரியை வ/இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை, வவுனியா), மாதங்கி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமணன் (பேராசிரியர், கணினி விஞ்ஞானத்துறை, யாழ்பல்கலைக்கழகம்), சுதாகர் (ஆசிரியர், வ/மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை, வவுனியா), வைகுந்தவாசன் (UNDP Project-தொழில்நுட்ப உத்தியோகத்தர், தெல்லிப்பழை), ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிராமி, அபிராமிதன், அபிசாயகி, அபிசாத்வி, அனகா, ஆரூரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் Dr.வாமதேவன் (லண்டன்), பானுமதி, கருணாநிதி (லண்டன்), சிவதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.04.2024 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

077 249 7278 (வைகுந்தவாசன்)
021 221 1776

தகவல்:
குடும்பத்தினர்.

(C5366) V-1

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 05 . 1961



மறைவு 30 . 04 . 2020

### அமரர் சண்முகநாதன் சத்தியவரதன்
(சந்திரன்)

ஆண்டுகள் நான்கு ஆனபோதிலும்
பறந்துசென்ற உம் அன்பினைப் பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே- நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்குகின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு ஆனபோதும்
எம் தலைவன் உங்களுக்கு நிகர் தான் எதுவோ? எம் வாழ்வு
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்ட வீடு வெறிச்சோடி
நிம்மதி ஏதுமின்றித் தவியாய்த் தவிக்கின்றோம்
உற்றவொரு துணைபோன்று உம் ஆத்மா எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதனைக் காட்டுமப்பா
நீங்கள் எமைக் காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பத்தின் ஒளி விளக்கே...

"சத்தியகிரி"
செட்டி லேன், இணுவில் மேற்கு.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூச்சுவிடச் சிரமப்பட்ட இளைஞர் பரிதாபச்சாவு!

யாழ்ப்பாணம், ஏப். 30
மூச்சு விடுவதற்குச் சிரமப்பட்ட நிலையில், மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற இளைஞர் சிகிச்சையின்போது பரிதாபமாக உயிரிழந்தார். சிறீதரன் சுஜிதரன் (வயது -19) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
சுன்னாகத்தில் வசித்துவந்த அந்த இளைஞர் கடந்த 27ஆம் திகதி காலை மூச்செடுக்கச் சிரமப்பட்டுள்ளார். இதை யடுத்து அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.
வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். மிகையான இதயத்தசை வளர்ச்சியாலேயே குறித்த மரணம் நிகழ்ந்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (ம-26-27)

## யாழ்ப்பாணம் போதனாவில் சிகிச்சையின்போது ஓட்டம்

### ஒருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 30
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட ஒருவர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.
அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த நபரே இவ்வாறு மருத்துவமனையில் இருந்து தப்பி ஓடியவராவார். நேற்று இரவு வரை குறித்த நபர் வீடுவந்து சேரவில்லை என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ள நிலையில், காணாமற்போனவரைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-66)

### ஊடகவியலாளர்...

பணிமனையில் நேற்று இடம்பெற்றன.
ஏ - 9 வீதி மூடப்பட்டு குடாநாட்டில் இளைஞர்கள் வெள்ளைவானில் ஒட்டுக்குழுக்களால் கடத்தப்பட்டும் சுட்டுக்கொல்லப்பட்டுமான 2007ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே, அதி உயர் பாதுகாப்பு பிரதேசமாக இருந்த ஸ்ரான்லி வீதியும், இராசாவின்தோட்டப் பகுதியும் சந்திக்கும் இடத்தில் வைத்து ரஜிவர்மன் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். அவர் கொல்லப்பட்ட இடத்துக்கு மிக அருகிலேயே இராணுவக் காவலரணும் அந்தக் காலத்தில் அமைந்திருந்தது. ரஜிவர்மனின் 17ஆவது நினைவஞ்சலி நிகழ்வுகள் உதயன் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்றது.
சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் கடத்தல்கள் தொடர்பில் புலனாய்வுச் செய்தியிடல்களை மேற்கொண்டிருந்த போதே ரஜிவர்மன் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### சட்டவிரோத...

கடற்படையினர் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். சட்டவிரோத மீன்பிடிக்குப் பயன்படுத்தப்பட்ட வெடிபொருள்கள் மற்றும் இதர உபகரணங்களும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.
கைதானவர்கள் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை திணைக்கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-60)

### வதைகளும்...

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சமீபத்தில் விசேட அதிரடிப்படையினரின் முகாமொன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு, "குற்றவாளிகளை நாட்டிலிருந்து வெளியேற்றுவது குற்றமில்லை. சரியான விடயத்துக்காக உங்கள் கரங்களில் உள்ள ஆயுதங்களைப் பயன்படுத்த தயங்கவேண்டாம். நாங்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்போம்" எனத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து சர்ச்சையாகியிருந்த நிலையிலேயே, அமைச்சின் கருத்துக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
தவறிழைத்தவர்களுக்கு அபராதம் விதிப்பது உட்பட நீதியை வழங்குவது இலங்கை அரசமைப்பின் ஆணையின்படி முற்றுமுழுதாக நீதித்துறையின் நியாயாதிக்கத்துக்குள் வருகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளின்போது உரிய நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றவேண்டும். சட்டத்துக்கு ஏற்ப நீதியான விசாரணைகளை
முன்னெடுக்கவேண்டும்.
சட்டவிரோத படுகொலைகள், பொலிஸ் தடுப்பில் மரணங்கள், சட்ட அமுலாக்கல் பிரிவினரின் சித்திரவதைகள் போன்ற சம்பவங்கள் அச்சம்தரும் விதத்தில் அதிகரித்துள்ள நிலையில் நீதிவழங்குதல், தீர்ப்பளித்தல், தண்டனை நிறைவேற்றல் என்பன நீதித்துறையின் கண்காணிப்புக்கு அப்பாற்றபட்டவை என்றும் அவற்றை கண்மூடித்தனமாக முன்னெடுக்கலாம் என்பது போன்றதுமான எண்ணத்தை அமைச்சர் டிரான் அலஸின் கூற்று உருவாக்குகின்றது.
பொதுமக்கள் பாதுகாப்பின் காவலன் என்ற அடிப்படையில் மக்களின் நலன்களுக்கு சேவையாற்றவேண்டியதேவை அமைச்சருக்குள்ளது. எனினும் தொடர்ச்சியாக தவறாக வழிநடத்தும் அறிக்கைகளை அவர் வெளியிடுவது பொதுமக்களின் நம்பிக்கைக்கு பாதிப்பையே ஏற்படுத்துகின்றது.
இதன் காரணமாக அமைச்சர் தனது கூற்றை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோருவதுடன், அமைச்சர் தனது தொடர்ச்சியான அறிக்கைகள் மூலம் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தல், சட்டத்தின் ஆட்சியை அலட்சியம் செய்தல் போன்றவற்றை ஊக்குவிப்பதால் அவரை உடனடியாக ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யவேண்டும்எனவும் வேண்டுகோள் விடுக்கின்றது - என்றுள்ளது. (அ-ம)

### சட்டத்தரணிகளின்...

கொல்வது பாவம் அல்ல என கடந்த வாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கருத்துத் தெரிவித்திருந்தார். அமைச்சரின் கருத்துக்கு எதிராக காட்டமான அறிக்கையை வெளியிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அமைச்சர் அலஸ் பதவி நீக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.
இந்த நிலையிலேயே, போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்காக நீதிமன்றில் தோன்றும் சட்டத்தரணிகளை வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தற்போது வெளிநாடு சென்றிருக்கும் நிலையில், இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் அமைச்சர் டிரான் அலஸின் நிர்வாகக்குழு உயரதிகாரி ஒருவர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும், சில சட்டத்தரணிகளுக்கும் இடையில் கடந்த சில மாதங்களாக பெரும் கருத்து முரண்பாடு தோற்றம் பெற்றிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.
பிரபல சட்டத்தரணிகள் பலர் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சார்பில் ஆஜராகி, பல மில்லியன் ரூபாவைப் பெற்றிருப்பதாக கடந்த ஆண்டு செப்ரெம்பர் 18ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் வெளியிடப்பட்ட கருத்தே இந்த முரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பதாகவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ம)

### சுகாதாரச்...

திருநெல்வேலிப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனால் அண்மையில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது சுகாதாரக் குறைபாடுகளுடன் இனங்காணப்பட்ட உணவகங்கள் அவதானிக்கப்பட்டு திருத்த வேலைகளுக்காக அவகாசம் வழங்கப்பட்டது. அந்த உணவகங்கள் நேற்று மறுபரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது, 3 உணவகங்களில் நிலவிய சுகாதாரக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படாமை தெரியவந்தது. இதையடுத்தே அந்த உணவகங்களுக்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நேற்றையதினமே வழக்குகள் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்போது மூன்று உணவகங்களுக்கும் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் திருத்தல் பணிகள் நிறைவடையும்வரை உணவகங்களை 'சீல்' வைத்து மூடுமாறும் நீதிவான் கட்டளையிட்டார். நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனால் அந்த உணவகங்கள் 'சீல்' வைத்து மூடப்பட்டன. (அ-ம-26)

### ஈழவேந்தன்...

யோகத்தருமான மா.க.ஈழவேந்தன் (வயது-92) உடல்நலக் குறைவு காரணமாக கனடாவில் நேற்றுக் காலமானார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கடந்த 2004ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த மாணிக்கவாசகர் கனகசபாபதி ஈழவேந்தன், புலம் பெயர்ந்து கனடாவில் வசித்து வந்தார்.
வயோதிபம் காரணமாக உடல்நலப் பாதிப்புக்குள்ளான நிலையில் கடந்த சில நாள்களாக கனடாவின் ரொறன்ரோ மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த அவர், நேற்றுக் காலமானார். (அ-ம-100-66)

### காரைநகரில்...

கடற்படையினர் வழங்கிய தகவல்களுக்கு அமையவே இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. கடந்த 19ஆம் திகதி அந்தப் பகுதியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் ஜே.சி.பி. இயந்திரமின்மையால் அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன. இந்த நிலையிலேயே இன்றையதினம் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
அகழ்வுப் பணிகளை முன்னிட்டு அந்தப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. நில அளவைத் திணைக்கள அதிகாரிகள், கடற்படையினர், பொலிஸாரின் பங்கேற்புடன் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. போர்க்காலத்தில் அந்தப் பகுதியில் கடற்படை முகாம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

### மின்னலால்...

வந்துள்ளது. இதன்போது மகேந்திரன் பிரபாகரன் (வயது - 26) என்ற இன்னொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-ம-35-19)

### முதலீட்டு...

காணி ஆணையாளர் இவ்வாறு பதிலளித்தார்.
"அரச காணிகள் தற்பொழுதும் முதலீட்டு நோக்கத்துக்காக வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் முதலீட்டுக்கு ஏற்ற காணிகள் அடையாளம் காணப்படுகின்ற பொழுது பிரதேச செயலர்களினூடாக நிச்சயமாக காணிகள் வழங்கப்படும்" என்று வடமாகாண காணி ஆணையாளர் அம்பலவாணர் சோதிநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-125)

### 7,000...

யாழ். மாவட்டத்தில் 5 வீதத்துக்குட்பட்ட காணிகளே அரச காணிகளாகக் காணப்படுகின்றன. சாவகச்சேரி, மருதங்கேணி, கோப்பாய், தெல்லிப்பழை ஆகிய பிரிவுகளில் அரச காணிகள் காணப்படுகின்றன. யாழ்.நகரை அண்டிய பகுதியில் அரச காணிகளின் விஸ்தீரணம் குறைவாகக் காணப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெல்லியை இலகுவாக வீழ்த்திய கொல்கத்தா

**புதுடில்லி, ஏப். 30**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லியை மிக இலகுவாகத் தோற்கடித்தது கொல்கத்தா.**

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணிக்கு ஆரம்ப வீரர்களான பிருத்வி ஷா மற்றும் ஜக் பிரேசர் இருவரும் 13 மற்றும் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். போரல் 18, சாய் கோப் 6 என தடுமாற்றம் தொடர்ந்தது. அணித்தலைவர் ரிஷப் பன்ட் மத்திய வரிசையில் கொஞ்சம் நம்பிக்கை ஏற்படுத்தினாலும் மறுமுனை பலவீனமாகவே உணரப்பட்டது. ரிஷப் பன்டும் 27 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். டெல்லி அணி 130 ஓட்டங்களைப் பெறுவதே சிரமம் என்ற நிலை இருந்தது. ஆனால், எவரும் எதிர்பாராத வகையில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் குல்தீப் யாதவ். 26 பந்துகளில் அவர் 35 ஓட்டங்களைப் பெற்றார். முடிவில் டெல்லி அணி 9 விக்கெட்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. கொல்கத்தா அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களான பில் சோல்ட் மற்றும் நரைன் இணை வெற்றிக்கான பாதையைக் காட்டியது. அதிரடியில் மிரட்டினார் பில் சோல்ட். 6 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 79 ஓட்டங்களை கொல்கத்தா அணி பெற்றிருந்தது. அணி 79 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நரைன் ஆட்டமிழந்தார். 68 ஓட்டங்களுடன் பில் சோல்ட்டின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. எனினும் அணித்தலைவர் ஸ்ரேயஸ் மற்றும் வெங்கடேஸ் இருவருடைய இணைப்பாட்டமும் பங்களிக்க டெல்லியை இலகுவாக வென்றது கொல்கத்தா. ஸ்ரேயஸ் 33 ஓட்டங்களுடனும், வெங்கடேஷ் 26 ஓட்டங்களுடனும் களத்தில் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)

**வேலையாள் தேவை**


பூக்கன்று விற்பனை நிலையத்திற்கு
தங்கி நின்று வேலை செய்ய
45 வயதிற்கு உட்பட்ட
ஆண் தேவை.
தொடர்புகளுக்கு: 075 944 4601

**வேலையாள் தேவை**

நல்லூரில் அமைந்துள்ள நாதன்
கபே உணவகத்திற்கு
Tea Maker ஒருவர் தேவை.
மாநகர சபை எல்லைக்குள்
வசிப்பவர் விரும்பத்தக்கது.
(CS 00368) S-1
தொடர்பு:- 077 358 0646

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி பேருந்து
நிலையத்தில் இருந்து
1 கிலோ மீற்றர் தூரத்தில்
A9 வீதியில்
2 1/2 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
076 430 1811



இந்த வருடம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மலையகம் பண்டாரவளை வலயத்துக்குட்பட்ட பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி, ஹாலி - எல தமிழ் வித்தியாலயம் மற்றும் பண்டாரவளை கிரேக் ஸ்ரீ சக்தி கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான இலவச கல்விச் செயலமர்வு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் ஏற்பாட்டில், கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-66)

# மாடுகள் கடத்தல் முறியடிப்பு 44 மாடுகள் மீட்கப்பட்டன!

வவுனியா, ஏப். 30

முல்லைத்தீவில் இருந்து பேருவளை மற்றும் கல்முனைக்கு மாடுகளைக் கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. இரண்டு லொறிகளில் கடத்தப்பட்ட 44 மாடுகள் இதன்போது மீட்கப்பட்டுள்ளன. மாடுகளைக் கடத்திச் சென்ற 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் பிரிவு, குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நீண்டகாலமாக இந்த மாடுகளை ஏற்றிச் செல்வதாகவும், பொலன்நறுவையில் உள்ள அரிசி ஆலைகளுக்கு நெல் கொண்டுசெல்லும் போர்வையில் பக்கவீதிகளைப் பயன்படுத்தி மாடுகளை ஏற்றிச் செல்வதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரண்டு லொறிகளில் இருந்த பசுக்களில் பெரும்பாலானவை கருவுற்ற பசுக்கள் என்றும், சில மாடுகள் நோய்வாய்ப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் சி தனபால, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சமந்த விஜேசேகர ஆகியோரின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையின் கீழ் சந்தேகநபர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ம-18)

# யாழ்ப்பாணம் வருகிறார் எரிக் சொல்ஹெய்ம்

யாழ்ப்பாணம், ஏப். 30

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய சர்வதேச காலநிலை ஆலோசகரும் முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வே நாடாளுமன்றத்தின் தற்போதைய உறுப்பினர் குலாட்டி ஹிமான் ஆகியோர் இன்று செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.**

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள தப்ரபேன் நிறுவனத்தின் கடலுணவுத் தொழிற்சாலைக்கே அவர்கள் வருகைதரவுள்ளனர்.** (ம-27)

# போதையில் சாரத்தியம் தனியார் பேருந்தின் சாரதி கைதானார்

**மதுபோதையில் பேருந்தைச் செலுத்திச் சென்ற சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். வவுனியாவில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

**வவுனியா தலைமைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தபோதே அவர் போதையில் சாரத்தியத்தில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.** (ம-18)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 28 . 05 . 1945 |  | 28 . 04 . 2024 |

## தர்மலிங்கம் யோகாம்பிகை

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்புத்துறை மேற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் யோகாம்பிகை அவர்கள் 28.04.2024, ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் ஆருயிர் மனைவியும், தயாளன் (கனடா), காலஞ்சென்ற அகிலன் மற்றும் நிமலன் (UK), மைதிலி (UK), Dr. துளசி (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயகீதா, ஹிசாந்தி, அம்பிகா, சிவகுமார் ஆகியோரின் மாமியாரும், Dr.சண்முகலிங்கம் (UK), காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, தர்மலிங்கம் மற்றும் மகாலிங்கம் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயசரஸ்வதி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் பத்மாவதி, செல்வராணி, குணேஸ்வரி, மங்கையற்கரசி, நவமணி, காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் பஞ்சலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், யாதவி, யாமினி, ஸ்ருதி, ஆதிரா, மித்ரா, ஷ்ரவன், சங்கீத் மற்றும் சைந்தவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (20A, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 659 9872

(CS/54867) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.